இணைப்பு.

[146-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 322-க்கான விடையைக் காண்க.]

புது டெல்லியில் நடைபெற்ற ஆட்சிமொழி மாநாட்டில் பின் வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

(அ) அரசு அலுவல்களில் இந்திய மொழிகள் பயன்படுத்துதல்.
(1) பல்வேறு மாநிலங்களின் மற்றும் மைய அரசினால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களும், விதிகளும் அதன்கீழ் வெளியிடப்பட்ட ஆணைகளும் ஆட்சி மொழிகளின் பயன்பாட்டிற்குப் போதுமானவையாக இல்லை. இன்னமும் ஆங்கிலத்தைப் பல்வேறு அலுவலகங்களிலும் பல்வேறு பொருள்களிலும் பயன்படுத்துவது கட்டுப்பாடுடையதாகவும் ஆங்கிலத்தை அனுமதிப்பதாகவும் உள்ளது. அத்தகைய கட்டுப்பாடும் விதிவிலக்கும் விரைவில் முடிக்கப்பட வேண்டும்.

(2) நிறைவேற்றப் பெற்ற ஆட்சி மொழிச் சட்டங்களும், அவற்றின் தொடர்பாக ஆட்சி மொழிகளின் பயன்பாடு பற்றி பிறப்பிக்கப்பட்ட ஆணைகளும் முறையாக நிறைவேற்றப்படாவிடில் அவை பொருளற்றனவாகிவிடும். பல்வேறு மாநிலங்களிலும், இந்திய அரசின் பல்வேறு அமைச்சகங்களிலும் பணி நிறைவேற்றப்படுவதை மேற்பார்வையிடும் துணையமைப்பு போதுமானவையாக இல்லை. இந்த ஏற்பாடுகளை வலுவாக்கப்பட வேண்டியது அவசியமாகும். பல்வேறு அரசு அலுவலகங்களிலிருந்து காலமுறை அறிக்கைகளை முறையாகப் பெறுவதுடன் அவ்வலுவலகங்களில் சம்பந்தப்பட்ட மொழிகளை அரசு ஆணைகளின்படி எந்த அளவுக்குப் பயன்படுத்தும் பணி நடந்துள்ளது. ஆணைகள் நிறைவேற்றுவதில் சுணக்கங்கள் அதற்கான காரணங்கள், அக்குறைபாடுகளைக் களைவதற்கான வழிவகைகள் பற்றி அவ்வரசு அலுவலகங்கள் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

3. மாநிலங்களில் அவரவர்களுடைய ஆட்சிமொழிகளில் பணி நடந்தாலும், இதுபற்றிய முன்னேற்றம் மன நிறைவளிப்பதாக இல்லை. ஒரு கால நிர்ணயத் திட்டத்தை ஏற்படுத்தி எல்லாப் பணிகளையும் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் அவரவர்களுடைய ஆட்சிமொழிகளில் செய்ய வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட வேண்டும்.

1979 மார்ச் 10]

4. ஒவ்வொரு மாநிலத்திலும் முதல் அமைச்சர் தலைமையில் ஒரு ஆட்சி மொழிக்குழு அமைக்கப்படுவதுடன், உயர்மட்ட அலுவலர்களின் தலைமையில் ஒவ்வொரு துறைக்கும் அதன் சார் நிலை அலுவலகங்களுக்கு ஒரு ஆட்சிமொழி நிறைவேற்றக்குழுவும் அமைக்கப்பட வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட திட்டத்தின்படி ஆட்சி மொழிகள் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதை இந்தக் குழுக்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

5. மத்திய நிலையில் மைய மாநில அரசின் பிரதிநிதிகள் பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள், அலுவல் சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கொண்ட ஒரு நிலைக்குழு அமைக்கப்பட வேண்டும். மாநிலங்களிலுள்ள ஆட்சிமொழிக்குழுக்கள் அவற்றின் தொடர்புடைய மாநிலங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றி ஒரு காலாண்டு அறிக்கையை இந்த நிலைக்குழுவிற்கு அனுப்ப வேண்டும்.

6. பல இடங்களில் ஆட்சிமொழிப் பணி மொழிப்பெயர்ப்பு மூலமாக செயற்படுத்தப்பட்டு வருகிறது. இது ஆட்சிமொழிகளின் முன்னேற்றத்தைத் தடை செய்கிறது. சில தேர்வுகளில் மொழிபெயர்ப்பு தேவைப்படலாம். ஆனால் பெரும்பான்மையாக மூலப்பணி ஆட்சிமொழிகளிலேயே செய்யப்பட வேண்டும்.

7. எல்லா மாநிலங்களிலும் ஒரு தனிப்பட்ட ஆட்சிமொழித் துறை அமைக்கப்பட்டு, ஆட்சிமொழிக்கொள்கை பற்றிய பணி, அதனை நிறைவேற்றல், மொழிபெயர்ப்பு, பயிற்சி, மொழிகளை விரிவாக்குதல் போன்ற பணிகளை அத்துறைக்கு அளிக்கப்பட வேண்டும். இத்துறையில் அலுவலர்களுக்குப் போதிய அதிகாரங்கள் அளிக்கப்பட்டால் தான் அவர்கள் கொள்கையை முறையாக நிறைவேற்ற முடியும்.

8. ஆட்சி மொழிப்பணிக்குத் தேவையான பணியாளர்கள் தட்டச்சுப்பொறிகள், தொலைத் தட்டச்சுப் பொறிகள் (டெலிபிரிண்டர்கள்) கணிப்புப் பொறிகள் (கம்ப்யூட்டர்கள்) போன்றவைகளுக்குப் போதுமான நிதி ஒப்பளிப்பு இருக்க வேண்டும். இந்தப் பணியை விரைவுபடுத்த வகுக்கப்படுகின்ற திட்டங்கள் ''திட்டச் செலவு'' என்று கருதப்பட்டு மற்ற திட்டங்களைப் போல இதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

9. முதல் அமைச்சர், அமைச்சர்கள் மற்றும் உயர்நிலை அலுவலர்கள் தாங்களே ஆட்சிமொழியில் தங்கள் பணிகளைச் செய்தால், சார்நிலைப் பணியாளர்கள் தாங்களும் அவ்வாறு செய்ய ஊக்கத்தை ஏற்படுத்தும்.

[1979 மார்ச் 10

10. மாநிலங்களில் பணி செய்வதற்காகத் தேர்ந்தெடுக்கப் படும் இந்திய ஆட்சிப் பணித் தொகுதி அலுவலர்களுக்கு மாநிலங்களில் நியமிக்கப்படுவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் ஆட்சி மொழிகளில் பயிற்சி அளிக்கப்பட்டால், அவர்கள் அலுவல் பணிகளை ஆங்கிலத்தில் செயற்படாமல் அப்பகுதிக்குரிய ஆட்சிமொழியில் செயற்பட ஏதுவாக இருக்கும்.

11. இன்றியமையாத வாய்ப்பு வசதிகள் இல்லாத காரணத் தால் ஆட்சிமொழிச் செயலாக்கம் சரியான முன்னேற்றம் பெறாமல் உள்ள பகுதிகளில் ஆட்சிமொழியிலேயே அலுவலகப் பணி செய்யும் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு, ரொக்கப் பரிசு அல்லது பாராட்டுச் சான்றிதழ்கள் முதலியன கொடுக்கப் பட வேண்டும். ஆனால் தேவையான வசதிகள் இருந்தும், ஆட்சி மொழியைப் பயன்படுத்த வேண்டுமென்ற ஆணைகள் நீண்ட காலமாக நடைமுறையில் இருந்தும் ஆட்சி மொழியில் செயற்பட போதிய அனுபவம் இருந்தும் வேண்டுமென்றே அரசு ஆணைகளை புறக்கணிக்கும் அலுவலர்கள் மற்றும் பணியாளர் களின்மீது தகுந்த ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதில் தவ றில்லை.

12. ஆட்சிமொழித் தொடர்பாகப் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்குப் பதவி உயர்வுகளை அளிக்கத் தக்க வாய்ப்பு வசதிகள் செய்யப்படும் வகையில் பணி விதிகளை மேம் படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

13. ஆட்சி மொழிகளில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சுப் பணிகளில் தனித்திறமை காட்டி, ஆட்சிமொழிகளி லேயே தம் பணிகளைச் செய்யும் பணியாளர்களுக்குத் தனி ஊதியம் அளிக்கப்பட வேண்டும்.

14. ஆட்சிமொழி, சாதாரண பணியாளரோ அல்லது பொது மக்களோ சுலபமாக அறிந்துகொள்ளும்படி எளிமையானதாகவும் பொருள் கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

15. முதல், அனைத்திந்திய ஆட்சிமொழி மாநாடு மிகவும் பயனுள்ளதென நிரூபிக்கப்பட்டுள்ளது. இத்தகைய மாநாடு குறைந்தது ஆண்டுக்கு ஒரு முறையேனும் சுற்று முறைப்படி நாட்டின் பல்வேறிடங்களில் கூட்டப்பட வேண்டும்.

16. ஆட்சி மொழிகள் பயன்பாட்டில் கருத்தார்வமிக்க உணர்வை உருவாக்குவதற்காக 1978–79 ஆம் ஆண்டை ''ஆட்சி மொழி ஆண்டு'' என்று நாடு முழுவதும் கொண்டாட வேண்டும். இந்த ஆண்டில் மாநில அரசுகள் மற்றும் மைய அரசின் எல்லா அலுவலகங்களுக்கும் தங்களுடைய பணியை ஆட்சி மொழியில் மிக அதிக அளவில் செய்ய கடுமையான முயற்சியை மேற் கொள்ள வேண்டும்.

1979* மார்ச் *10]

17. பல்வேறு மாநிலங்களிலும், மைய அரசு அலுவலகங்களிலும் அமைந்த ஆட்சி மொழிகளின் முன்னேற்றம் மற்றும் அது குறித்து அடையப்பெற்ற இடர்பாடுகள் தொடர்பான தகவல்களை பரிமாற்றம் செய்து கொண்டால் பொதுப் பிரச்சினைகளை இனம் கண்டு கொள்வதும், அவற்றுக்கான தீர்வுகளைக் கண்டறிவதும் எளிதாக அமையும். மைய அரசின் ஆட்சி மொழித்துறை ''ஆட்சிமொழிகள் துறை'' என மாற்றப்பட வேண்டும். மேலும் இது தொடர்பான ஒருங்கிணைப்புப் பொறுப்பும் அதனிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இந் நோக்கத்திற்காக, மைய அரசு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

18. இந்தி பேசாத பகுதிகளிலுள்ள மைய அரசு அலுவலகங்களில் பொதுமக்களிடமிருந்து வட்டார மொழிகளில் பெறப்படும் கடிதங்கள் குறித்து காலத்தாழ்வின்றி நடவடிக்கைகளை எடுப்பதற்கியலும் வகையில் அக்கடிதங்களை இந்தியில் அல்லது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கத்தக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

19. இந்தி பேசும் மாநிலங்களில் வான் தந்திச் செய்திகள் இதுவரை ஆங்கிலத்தில் மட்டும் அனுப்பப்பட்டு வந்தன. இந்தி பேசும் பகுதிகளுக்கு மட்டுமென அனுப்பும் வான் தந்திச் செய்திகளை இந்தியில் அனுப்புவதற்கு உடனடியாக மைய அரசின் உள்துறை அமைச்சகம் தக்க ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

20. மைய அரசு, அரசுத் துறையில் ஒரு நிறுவனத்தை நிறுவ இந்திய மொழிகளுக்குரிய தட்டச்சுப் பொறிகள், தொலைத் தட்டச்சுப் பொறிகள் மற்றும் பிற இயந்திரத் துணைப் பொருள்களை உற்பத்தி செய்யவும், இந்திய மொழிகள் தொடர்பான அச்சுத் தொழில் நுட்பவியலை மேம்பாடு அடையச் செய்யவும், நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். அந்நிறுவனமானது தொடர்புடைய பல்வேறு துறைகளில் ஆராய்ச்சிகள் நடத்துவதற்கு இயலும் வகையில் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) பொதுத்துறை நிறுவனங்களில் இந்திய மொழிகளின் பயன்பாடு.—

21. மாநில அரசுகள் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எந்த அளவுக்கு விரைவாக எடுக்க முடியுமோ அந்த அளவுக்கு விரைவாக எடுக்க வேண்டும் :—

(i) எந்த ஒரு மாநிலத்திலாவது, அந்த மாநிலத்தில் பொதுத் துறை நிறுவனங்களில் ஆட்சிமொழியை பயன்படுத்துவதற்கென வேண்டப்படும் அறிவிக்கை இதுவரையில் பிறப்பிக்கப் படாமலிருந்தால், அத்தகைய அறிவிக்கை உடன் பிறப்பிக்கப்பட வேண்டும்;

(ii) இத்தகைய பொதுத் துறை நிறுவனங்களில் ஆட்சி மொழிகளை பயன்படுத்த காலவரையிட்டதொரு திட்டத்தைத் தயாரித்து செயற்படுத்துவதுடன் அந்நோக்கத்திற்காகப் பொறுத்த மான அமைப்பினையும் அளிக்க வேண்டும்;

(iii) ஆட்சிமொழிக்குரிய தட்டச்சுப் பொறிகளைப்பெறவும் பணியிடைப் பயிற்சி அளிக்கவும், படிவங்கள் போன்ற வற்றை மொழி பெயர்க்கவும், அவற்றின் பணியாளருக்கு பார்வை நூல்களைக் கிடைக்க செய்யவுமான நடவடிக்கைகளை இப் பொதுத்துறை நிறுவனங்கள் எடுத்தல் வேண்டும்;

(iv) ஆட்சி மொழித் திட்டத்தை இப்பொதுத்துறை நிறு வனங்களில் செயற்படுத்த கவர்ச்சியான பக்க உதவிகள் அளிக்கப் பெறுதல் வேண்டும்.

இ. பொதுப்பணிகளில் இந்திய மொழிகளின் பயன்பாடு.

22. மைய அரசினால் மேற்கொள்ளப்பெற்ற முடிவின்படி, மைய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படுகின்ற அனைத்திந்தியப் பணித் தேர்வுகளில் ஆங்கிலம் நீங்கலாக மற்ற பொருள்கள் அனைத்திற்குரிய வினாத்தாள்களுக்கான மறு மொழி யினை அனைத்து மாநிலங்களில் ஆட்சி மொழிகளில் எழுதும் மாற்று மொழித் திட்டத்தை 1978-ல் முழுமையாகச் செயல்படுத்த வேண்டும். ஆணையரும் இந்த பொருள்களுக்கான வினாத் தாள்களை உரிய அனைத்து மாநிலங்களின் ஆட்சி மொழிகளில் பெற நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

23. அனைத்திந்தியப் பணித் தேர்வுகளில் அரசமைப்புச் சட் டத்தில் எட்டவாது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தற் கால இந்திய மொழி ஒன்றைக் குறித்த தாள் ஒன்று கட்டாய மாக அமைத்தல் வேண்டும்.

24. லால்பகதூர் சாஸ்திரி தேசிய ஆட்சிக் கழகத்திலும் மாநிலங்களிலும் அனைத்திந்திய பணித் தொகுதிகளைச் சார்ந்த, தகுதிகாண்பருவத்தினருக்கு ஆட்சி மொழிகளில் பயிற்சி அளிப் பதற்கென தற்பொழுதுள்ள வசதிகள் போதுமானதாக இல்லை, மேலும் பயிற்சிக்கென வகை செய்யப்பட்டுள்ள கால அளவும் போதுமானதாக இல்லை. இக்குறைபாடுகள் சரி செய்யப்பட வேண்டும்.

25. அனைத்திந்தியப் பணித் தொகுதிகளைச் சார்ந்த தகுதி காண் பருவத்தினர் தாங்கள் பணியில் சேர்ந்த மாநிலத்தில் ஓராண்டுகால அளவிற்குள்ளாக பொருத்தமானதொரு நிலைப் பட்ட ஆட்சி மொழித் (உயர் இடைநிலை) தேர்வில் தேர்ச்சி பெற

1979 மார்ச் 10]

வேண்டுவது கட்டாயமாக்கப்பட வேண்டும். இந்நோக்கத்திற்காக பணியிடைப் பயிற்சி அளிப்பதற்கென மாநிலங்களால் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

26. மாநிலங்களாலும், அரசுப் பணியாளர் தேர்வாணைகளாலும் பிற ஆளெடுப்பு முகமைகளாலும் நடத்தப்பெறும் ஆளெடுப்புத் தேர்வுகளில், ஆங்கிலம் அல்லது இந்தி மற்றதொரு தாளுடன் மாநிலத்தில் ஏற்பளிக்கப் பெற்ற ஏதேனுமொரு இந்திய மொழியிலமைந்த கட்டாயத்தாள் (ஆட்சிமொழி உட்பட) இருத்தல் வேண்டும். மாநிலத்தின் ஆட்சிமொழி யல்லாத மற்ற மொழி ஒன்றினைத் தேர்வு எழுத தேர்ந்தெடுப்பவர்கள் பணியில் சேர்ந்த பின்னர் ஆட்சிமொழியில் குறிப்பிடப்பட தேர்வினை எழுதச் செய்தல் வேண்டும்.

27. ஆட்சிமொழிகளில் பயிற்சி அளிக்கப்பட வேண்டிய அரசுப் பணியாளர்கள் அவர்கள் 45 வயதை அடைவதற்கு முன்னர் அத்தகைய பயிற்சி அளிக்கப்பட்டால் ஆட்சிமொழிகள் தொடர்பான விதிகளை நடைமுறைபடுத்துவதில் எந்தவித இடையூறும் இருக்காது.

28. அரசுப் பணியாளர் தேர்வாணையத்தாலும், பிற ஆளெடுப்பு முகமைகளாலும் நடத்தப்பெறும் அனைத்து தேர்வுகளில் தேர்வு எழுதும் மொழியாக ஆட்சி மொழிகளை அனுமதிக்கும் மாநிலங்களின் கொள்கையில் சீரான தன்மை இருக்க வேண்டும். இந்நோக்கத்திற்காக, அனைத்து மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்களும், பிற ஆளெடுப்பு முகமைகளும் ஆளெடுப்புக்குரிய அனைத்துத் தேர்வுகளுக்கும் மாநில ஆட்சி மொழிகளை மாற்று மொழியாகக் கொள்ள வேண்டும்.

ஈ. சட்டத்துறையின் இந்திய மொழிகளின் பயன்பாடு.

29. ஆறு ஆண்டுக்காலத்திற்குள்ளாக மைய, மாநிலச் சட்டங்கள் மற்றும் அதன் கீழமைந்த விதிகளை மொழிபெயர்க்கும் பணியினை முடிப்பதற்குக் கால வரையிட்டதொரு திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும், பணியை மரிப்பாய்வு செய்யவும், நடைமுறைப் படுத்துதலை விரைவுப்படுத்தவும் உயர் அதிகாரக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

30. (அ) சட்டங்கள் இரு மொழிகளிலோ அல்லது ஆங்கிலம் மற்றும் மாநில ஆட்சிமொழியிலோ வெளியிடப்பட வேண்டும்.

(ஆ) அவ்வாறு இரு மொழிகளில் வெளியிடப்படும் மைய சட்டங்களின் வெளியீட்டுச் செலவினை மைய அரசு ஏற்க வேண்டும்.

31. 1963-ம் ஆண்டைய ஆட்சிமொழிச் சட்டத்தின் பிரிவு 6-ல் மாநிலச் சட்டங்களை இந்தியில் மொழி பெயர்க்க வகை செய்யப்பட்டுள்ளது. மொழி பெயர்ப்பு சீராக அமையவும் அதன் தரத்தைப் பேணவும் இப்பணியானது மைய அரசினால் மேற் கொள்ளப்பட வேண்டும்.

32. 1973—ம் ஆண்டைய ஏற்பளிக்கப்பெற்ற மொழி பெயர்ப்பு (மையச் சட்டங்கள்) சட்டங்கள எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாகச் செயற்பாட்டிற்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

33. (அ) சட்டங்கள் மூலத்திலேயே மாநில ஆட்சிமொழியில் இயற்றப்பட வேண்டும்.

(ஆ) மையச் சட்டங்களை மூலத்திலேயே இந்தியில் இயற்ற ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

(இ) சட்டங்களை இந்தி மொழிகளில் இயற்றப் பயிற்சி அளிப்பதெற்கென நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

(ஈ) இந்திய மொழிகளில் மாதிரி வரைவுகளைக் தொகுக்க வேண்டும். அவை இந்திய மொழிகளைப் பயன்படுத்தும் வரைவு எழுதுபவர்களுக்கு பெரிதும் பயன்படும்.

(உ) இந்திய மொழிகளைப் பயன்படுத்தும் வரைவு எழுது பவர்களுக்கு ஊக்கமூட்ட அவர்களுக்கு அதிக அளவிலான சம் பள வீதங்கள் போன்றவை அளிக்கப்பட வேண்டும்.

34. மாநில அரசுகள், மாதிரி தீர்ப்புகளை அவற்றுக்குரிய ஆட்சிமொழியில் தயாரிக்க வேண்டும். மாநில அரசுகள் சட்டச் சொல் அகராதிகளையும் தொகுக்க வேண்டும். மாநில ஆட்சி மொழியிலமைந்த மாதிரி தீர்ப்புகள், சட்டச் சொல் அகராதிகள், மற்றும் சட்டங்கள் போதுமான அளவில் நீதிமன்றங்களுக்கு வழங்கப்படவேண்டும்.

35. கேர் ஆணையத்தினால் அனைத்திந்திய பரிந்துரைக்கப் பட்ட சொல் தொகுதி பற்றிய கோட்பாட்டினை பந்த ஆணையம் ஏற்றுக் கொண்டது. மேற்கண்ட ஆணையமும், மற்றும் குழு வின் பரிந்துரைக்கிணங்க பெரும் அளவுக்கு இயலும் வகை யில் ஒத்த தன்மை அமைகின்றவாறு அனைத்திந்திய சொல் தொகுதியினை உருவாக்க 1960-ம் ஆண்டைய குடியரசுத் தலைவ ரது ஆணை வகை செய்துள்ளது. இச்சொல் தொகுதியினை ஏற்றுக்கொண்டு பயன்படுத்திய பின்னர் மாநிலங்கள் இச்சொல் தொகுதியிலுள்ள சொற்களைத் தவிர பிற சொற்களைப் பயன் படுத்தக்கூடாது. இனி வருங்காலத்திலும் இச்சொல் தொகுதி ஏற்றுக்கொள்ளப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும்.

[1979 மார்ச் 10]

36. மாநில உயர்நீதி மன்றங்களால் வெளியிடப்பட்ட குறிப்பிடப்படக்கூடிய தீர்ப்புரைகள் மாநில ஆட்சிமொழியில் உயர் நீதி மன்றங்களால் மொழிபெயர்க்கப்பட வேண்டும்.

37. 1963-ம் ஆண்டைய ஆட்சிமொழிச் சட்டத்தின் பிரிவு-7 தக்கவாறு திருத்தப்பட வேண்டும். அவ்வாறு திருத்தப்பட்டால் உயர் நீதி மன்றங்களால் வெளியிடப்பெறும் தீர்ப்புரைகளை ஆட்சி மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பது கட்டாயமாக அமையாது. தேவைப்படும் பொழுது தீர்ப்புரைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

38. நீதித்துறைப் பதவிகளுக்கு நியமனம் செய்யப்படுவோருக்கு மாநில ஆட்சிமொழியில் பயிற்சி அளித்தல் வேண்டும். அவ்வாறு அளிக்கப்பட்டால் அவர்கள் தீர்ப்புரைகள் போன்றவற்றை அந்த மொழியிலேயே வெளியிடக்கூடும்.

39. நீதித்துறையைச் சார்ந்த முதுநிலை அலுவலர்களான கூடுதல் மாவட்ட நடுவர்கள், மாவட்ட நடுவர்கள் போன்றவர்கள் மாநில ஆட்சிமொழியில் திறமை பெறுவதற்கு இயலும் வகையில் ஆய்வரங்குகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அவ்வாறு செய்தால் அவர்கள் தங்களுடைய பணியை மாநில ஆட்சி மொழியிலேயே நடத்தலாம்.

40. மாநிலங்கள் தங்களுடைய அலுவலர்களை அதாவது வழக்குரைஞர்களை நீதிமன்றங்களில் முடிந்தவரையில் அவற்றின் வழக்குகளை மாநில ஆட்சி மொழியிலேயே வாதிட கட்டளையிட வேண்டும். இதனால் முடிவில் அனைத்துப் பணிகளையும் மாநில ஆட்சிமொழியிலேயே நடத்த இயலும்.

41. மாநில அரசுகள் தங்களுடைய ஆணை உறுதிப் பத்திரங்கள், வாதுரைகள் மற்றும் எழுத்து வடிவிலான வாக்குமூலங்களை ஆட்சி மொழியில் மட்டும் தாக்கல் செய்தல் வேண்டும்; அவ்வாறு செய்வதனால் அத்தகைய பணிகள் முடிவில் மாநிலங்களின் ஆட்சி மொழிகளிலேயே நடைபெறும்.

42. சார்நிலை நீதிமன்றங்களில் தீர்ப்புரைகள் எழுதுதல், தீர்ப்பாணைகள் அளித்தல் மற்றும் ஆணைகள் அளித்தலானது மாநில ஆட்சிமொழியிலேயே அமையுமாறு கட்டாயப்படுத்தப்பட வேண்டும்.

43. பல்கலைக்கழகங்கள் சட்டக் கல்வியைப் பயிற்றுவதற்கு மாநில ஆட்சிமொழியிலும் பயிற்று மொழியாக கொள்ள ஊக்குவிக்கப்பட வேண்டும்.

[1979 மார்ச் 10

44. இந்திய மொழிகளைப் பயிற்று மொழியாகக் கொண்டு தேர்வில் வெற்றி பெற்றதொரு சட்டப்பட்டதாரி ஒரு வழக்குறைஞராகத் தகுதி பெறுவதற்கு முன்னர், ஆங்கிலத்திலமைந்ததொரு தேர்வில் தேர்வு பெற வேண்டுமென்று இந்திய வழக்குரைஞர் மன்றத்தால் இயற்றப்பட்ட விதி நீக்கப்படவேண்டும்.

45. உச்ச நீதிமன்ற நடவடிக்கைகளில் விருப்புத் தேர்வுக்கேற்ப இந்தியைப் பயன்படுத்த அனுமதிப்பதற்கென அரசமைப்புச் சட்டத்தின் 348–வது பிரிவுக்கூறு தக்கவாறு திருத்தப்பட வேண்டும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS